**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.61 of 2023**
**Prosecution Witness**:PW4

| | | | |
|---|---|---|---|
| Name | மகேந்திரன் (PW4) | | |
| Father's Name | சாமிநாதன் | | |
| Village | ரங்காநகர் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் மேற்படி முகவரியில் வசித்துக் கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். 07.01.2023 தேதி அன்று விபத்து நடந்த இடத்தை பார்க்க சென்றிருந்தோம். அப்போது போலீசார் அங்கு விசாரணை செய்து சம்பவ இடத்தை பற்றி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் என்னுடன் வேலை செய்த மற்றொரு நபரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் இரண்டாவதாக சாட்சியமளித்த சுரேஷ் என்பவரை எனக்கு தெரியும் அவரும் நானும் ஒன்றாக வேலை செய்து வருகிறோம். இந்த விபத்து நடந்தது சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்லும்போது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 முதல் 20 நபர்கள் இருந்தார்கள்.சம்பவம் நடந்த இடத்தை நான் போலீசருக்கு அடையாளம் காண்பிக்கவில்லை. போலீசார் வரைந்து வைத்த வரைபடத்தில் நான் கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் சுரேஷ் என்பவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் காவல்

நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |